பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர் 5 பிரமோதூத ஹு புரட்டாதி மீ 04 உ வியாழக்கிழமை (20-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 30 கதிர் 200

# எல்லைப்புறத்தில் காவல்புரிய

# 35,000 ஊர்காவலர் சேர்ப்பு!

## ஸ்ரீலங்கா அரசு மும்முரம்

கொழும்பு, செப். 20

வடக்கு — கிழக்கு எல்லைப்புறத்தில் பாதுகாப்பு வழங்குவதற்காக ஊர்காவலர் படைக்கு மேலும் 35 ஆயிரம் பேர் உடனடியாக சேர்க்கப்படவிருக்கிறார்கள்.

—இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

ஊர்காவல் படையில் சேருபவர்களுக்கு சிறுரக ஆயுதப் பயிற்சி வழங்கப்படும் என்றும்—

பின்னர் இவர்கள் பொலிஸ் படையின் கீழ் பணிபுரிவர் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

ஊர்காவல் படையினருக்கு நாளாந்தம் ஐம்பதுரூபா அலவன்ஸ் வழங்கப்படும் என்றும் இப்படைக்கு ஏற்கனவே 7 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டு விட்டனர் என்றும் மேலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ரூ. 50 லட்சம் மட்டுமே வந்தது

யாழ்ப்பாணம், செப். 20

பருத்தித்துறைக்கு நேற்று வந்துசேர்ந்த கப்பலில் இயங்கவிருக்கும் வங்கியில் கொடுப்பனவுகளைக் கையாள ஐம்பது லட்சம் ரூபா மட்டுமே கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கை வங்கியின் இரு அதிகாரிகள் இந்தப் பணத்தைக் கொண்டுவந்துள்ளனர்.

திணைக்களத் தலைவர்கள் இலங்கை வங்கிக் காசோலைகளைக் கொடுத்துப் பணத்தைப் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-3-6)

## நிவாரண உணவு தொடர்ந்து கிடைக்கும்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்-மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோருக்கும், தொழில் மற்றும் வருமானம் இழந்தோருக்கும் தொடர்ந்தும் ஒவ்வொரு வாரமும் நிவாரணமாக உலர் உணவு வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இந்தத் தகவலைத் தெரிவித்தார்,

[உ-3-6]

## மின்சாரம் வழங்கப்படும்; யாழ் அரச அதிபருக்கு உறுதி

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்.மாவட்டத்துக்கு மின்சாரம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை மின்சார சபைத் தலைவர் திரு. என். ஏ. ஜே. பெரேரா இவ்வாறு தம்மிடம் உறுதி அளித்ததாக யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

கொழும்பில் இலங்கை மின்சார சபைத் தலைவரைச் சந்தித்து யாழ். மாவட்டத்துக்கான மின்விநியோகம் குறித்து தாம் பேச்சுக்கள் நடாத்தியதாகவும்—

மின்சார சபையின் சுன்னா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகரில் படையினர் சூடு! ஒருவர்பலி !!ஒருவர் காயம்!!!

காரைநகர், செப். 20

காரைநகரில் நேற்றுக் காலை படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமுற்றார்.

பாலாவோடையைச் சேர்ந்த நவரத்தினம் வரதராசா (வயது 10) என்பவரே உயிரிழந்தவராவார்.

இலந்தைச் சாலையைச் சேர்ந்த சுந்தசாமி தேவராசா (வயது 27) காயமுற்றார்.

காலை 9 மணியளவில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஐந்து படகுகளில் வந்து சாந்திபுரம் பகுதியில் இறங்கிய படையினர் பாலா

(3 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் முற்றுகை முயற்சி திருமலையில் முறியடிப்பு

யாழ்ப்பாணம், செப் 20

திருக்கோணமலை மாவட்டம் கடவாணையில் கடந்த திங்களன்று தமது முகாம் ஒன்றை முற்றுகையிட அரச படையினர் எடுத்த கூட்டு முயற்சி முறியடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

பாலம்போட்டாறு, மங்கி பிரிட்ஜ், வில்கம் விகாரை, 10ஆம் கட்டை ஆகிய முகாம்களில் இருந்து ஒரே நேரத்தில் வெளியேறிய இராணுவத்தினரும், கடவாணைப் பகுதியிலிருந்த கடற்படையினரும் தொடர்ந்து ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்தியவாறு - பொம்மர், ஹெலி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று "நோட்டீஸ் மழை"!

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில் இருபாலை, திருநெல்வேலி. மானிப்பாய், சங்கானை, கோண்டாவில், சண்டிலிப்பாய், சுன்னாகம், மருதனாமடம், தெல்லிப்பளை பகுதிகளில் நேற்று மாலை "நோட்டீஸ்" மழை பொழிந்தது.

நேற்றுமாலை நேரம் முழுவதும் ஹெலிக்கொப்டர்களில் இருந்து பல்வேறு விதமான துண்டுப் பிரசுரங்கள் அள்ளி வீசப்பட்டன,

இவ்வாறு வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்களில் எட்டு வகைப் பிரசுரங்கள் நேற்றிரவு உதயன் பணிமனைக்குக் கிடைத்தன. (உ)

## ★ யாழ். கோட்டைப் பகுதியில் உள்ள

# புலிகளின் பங்கர்களை தகர்ப்பது கடினம் என்கிறார் ராணுவ அதிகாரி

யாழ்ப்பாணம், செப். 20

யாழ் கோட்டைக்கு வெளியே நன்கு அரண் அமைக்கப்பட்ட பதுங்கு குழிகளை [பங்கர்களை] புலிகள் அமைத்திருக்கிறார்கள். அவற்றைத் தகர்ப்பது இலகுவானதல்ல.

—இவ்வாறு சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்ற ராய்ட்டரின் செய்தியை அரச சார்பான - "லேக் ஹவுஸ்" வெளியீடான - 'தினகரன்' பத்திரிகையின் 18 ஆம் திகதி இதழில் பிரசுரமாகியிருக்கிறது.

விமானப்படையினர் 110 இறாத்தல் முதல் 166 இறாத்தல் வரையான குண்டுகளைப் போட்டாலும் இந்தப் பதுங்கு குழிகளைத் தகர்க்க முடியவில்லை என்றும்—

புலிகள் பங்கர்களுக்குப் போதிய பாதுகாப்புடன் இருக்கிறார்கள். அவர்களைச் சுற்றியுள்ள நீண்ட வீதிகளில் கண்ணிவெடிகளும், கட்டடங்களில் பொறி வெடிகளும் வைக்கப்பட்டுள்ளன என்றும்—

யாழ். கோட்டைக்கு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மாவிட்டபுரம் பகுதியில் நேற்றும் பொம்மர் தாக்கு!

யாழ்ப்பாணம், செப். 20

மாவிட்டபுரம் பகுதியில் நேற்றும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்று நண்பகல் 12 30 மணி அளவில் இரண்டு பொம்மர்கள் கீரிமலை வீதியில் ரொக்கட் தாக்குதல்களை நடத்தின.

அம்பனை சந்தியில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு தாக்குதலால் அம்பனை அலுமினியத் தொழிற்சாலையும், அதற்கு அருகில் உள்ள வீடுகள் சிலவும் சேதமடைந்தன. (உ-3-6)

## அரியாலைப் பகுதியிலும் பொம்மர் குண்டு வீச்சு

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்திற்கு சமீபமாக நேற்று பிற்பகல் 1 30 மணி அளவில் பொம்மரில் இருந்து குண்டு வீச்சு மற்றும் கலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பொம்மர் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்த அதே சமயம் இரண்டு ஷெல்களும் இப்பகுதியில் விழுந்து வெடித்தன; இச் சம்பவத்தில் பெரிதாகச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை—

நல்லூர் வடக்கு இராஜ வீதி மற்றும் முத்திரைச் சந்தை, கல்வியங்காடு, திருநெல்வேலிப் பகுதிகளிலும் ஹெலி ஒன்று பரவலாக வேட்டுக்களைத் தீர்த்தது.

இதனால் சில வீடுகளின் கூரை ஓடுகள் உடைந்து நொருங்கின. [ஒ-5-143]

## 3 தமிழர்கள் தாக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம். செப் 20

கடந்த வாரம் மூதூரிலிருந்துதோப்பூருக்கு பொருள்கள் வாங்கச் சென்ற மூன்று தமிழர்கள் முஸ்லிம் ஊர்காவலரினால் அடித்துக் காயப்படுத்தப்பட்டனர்.

க. வைரமுத்து [வயது 65], [illegible] வைரவன் முத்துக்குமார் [வயது 46] ஆகியோரே காயமுற்றனர். [உ]

## 12 ஆயிரம் தொன் உணவு மாதாந்தம் இங்கு வருமாம்

### யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ் மாவட்டத்துக்கு இந்த மாத இறுதிக்குள் 6 ஆயிரம் தொன் உணவுப் பொருள்களுடன் கப்பல் ஒன்று வரவிருக்கிறது.

அதன் பின்னர் மாதம் தோறும் 12 ஆயிரம் தொன் உணவுப் பொருள்களை அனுப்ப உறுதிவழங்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து நேற்றிரவு யாழ்ப்பாணம் திரும்பிய அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் மேற்கண்ட தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பிலிருந்து கப்பலில் புறப்பட்ட அரச அதிபர் நேற்றுமாலை இங்கு வந்து சேர்ந்தார்.

கொழும்பில் தாம் மேற்கொண்ட முயற்சிகள், நடவடிக்கைகள் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்துக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

### வகுப்புக்கள்

Toefl வகுப்புக்கள் Ere, Sat வகுப்புக்கள் Spoken English வகுப்புக்கள் ஆரம்பம் நேரடித் தொடர்பு கொள்க: ஆசிரியர் S B. Iyar 22, சேர்ச் லேன், முதலி கோவிலடி. கொக்குவில் மேற்கு, கொக்குவில். [14213]

### அறிவித்தல்

விக்ரேஸ், நியூவிக்ரேஸ், விக்ரர் அன்சன்ஸ் ஸ்தாபனங்களில் திருத்தக்கொடுத்த பொருட்கள் யாவும் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்கள், விரும்பினால் கீழ்காணும் முகவரியில்தொடர்பு கொள்ளலாம். 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி. யாழ்ப்பாணம். (14219)

### அரிச்சுவடி ஏடுகள்

விஜய தசமி தினத்தன்று பாலர்களுக்கு வித்தியாரம்பம் செய்ய உள்ள சமயத்தாபனங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் நேரில் தொடர்பு கொண்டு தேவையான அரிச்சுவடி ஏடுகள், சகலகலா வல்லிமாலை ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். மிக்வைற், யாழ்ப்பாணம், (சி-5204)

### டில்கா வாச் வேக்ஸ் [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (கிராம சபைக்கருகில்) நடைபெறுகின்றது சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்றோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. [14224]

### காணவில்லை

மிகவும் அன்புடன் வளர்க்கப்பட்ட சாம்பல் நிறபொமனேரியன் பெண் நாய்க்குட்டி காணாமல் போய் விட்டது. தயவுசெய்து காண்பவர்கள் சிரமத்தைப் பாராமல் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத் தரவும். சன்மானம் தரப்படும். 887, ஆஸ்பத்திரி வீதி. சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (14220)

## பண மோசடியில் கூட்டுத்தாபன தலைவர்கள்

கொழும்பு, செப். 20

பொதுப்பணத்தைக் கையாடினர் என்று கூறப்படும் இரண்டு கூட்டுத்தாபனங்களின் தலைவர்களை ராஜினாமாச் செய்யும்படிஜனாதிபதி பிரேமதாஸா பணித்திருக்கிறார்.

பதவி விலகுவதற்கு முன்னர் கையாடல் செய்யப்பட்டதாகக் கூறப்படும் பணத்தை சம்பந்தப்பட்ட கூட்டுத்தாபனங்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்றும் அக் கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கு தான் உத்தரவிட்டிருப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஐக்கியதேசியக்கட்சி செயற்குழுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

## அலங்கார தேர் ஊர்தி

கோப்பாய் வட்ட அவையின் ஏற்பாட்டில் தியாகி திலீபனின் அலங்காரத் தேர் ஊர்தி கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சிற்றூரவை தோறும் வீதி உலா வருகின்றது

## லொறிகளில் டீசல் திருட்டு

வட்டுக்கோட்டை, செப்.20

...னமின்தறிஆலையில் இரவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நான்கு லொறிகளில் இருந்து டீசலும், சில பொருள்களும் அண்மையில் திருடப்பட்டன.

சங்கானை ப. நோ. கூ. சங்கத்துக்குச் சொந்தமான மூன்று லொறிகளிலும், ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்துக்குச் சொந்தமான ஒரு லொறியிலுமே பொருள்கள் திருடப்பட்டன.

களவாடப்பட்ட டீசலின் பெறுமதி மட்டும் சுமார் 18 ஆயிரம் ரூபா இருக்கும் என மதிப்பிடப்பட்டது. (ஓ-161)

## பனை அபிவிருத்தி சபை

சகல பணியாளர்களுக்கும்-

பணியாளர்களின் கடமைகள் சம்பந்தமாகவும், சபையின் உற்பத்தி நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் ஆராயும் பொருட்டு ஓர் கூட்டம் எதிர்வரும் 22 – 09 – 1990 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சுன்னாகம் ரொபி உற்பத்தி நிலையத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் ஆய்வு நிறுவனத்தினர் பங்கு பற்றி உரை ஆற்றுவார்கள்.

தயவு செய்து சகலரும் சமுகம் தரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்.

(சி-5205)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு: 1960 – 02 – 06

அரக்கர் அழிப்பு: 1990 – 08 – 11

அமரர்

### கனகசபை இளங்கோபன்

உளவானம் சிவப்ப உவகை மலர் மொட்டவிழ
இளம் பருதியென உதித்த எம்
அன்பு மைந்த இளங்கோவே!
மணமாலை ஏந்த நின்றநின் எழில்
மார்பில் தைத்தகுண்டு
பிணமாக்கியதெம் குலத்தை நீயோ சென்றாய்
இறையடிக்கே!

உன் பிரிவால் வாடும்;
அன்புத் தாயார், சகோதரர்கள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

யார்வத்தை,
கொல்லங்கலட்டி. [1421]

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 29- 12- 1968

மறைவு: 07- 08- 1990

### ஜம்புலிங்கம் லிங்கேஸ்வரன்

(பாபு)

மானிப்பாய் ஆஸ்பத்திரியடியில் 07- 08- 1990 அன்று நடந்த பொம்பர் தாக்குதலின் போது அகால மரணம் அடைந்த எம் அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய வேண்டுவதோடு அவரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் அன்னாரின் இன்றைய கிரியைகளிலும் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் பணிவன்புடன் வேண்டுகிறோம்

உமது பிரிவால் துயருறும்:
ஜம்புலிங்கமும் பாரியாரும்,
குடும்பத்தினரும்.

[14215]

## Seventh Year REMEMBRANCE

### WILFRED DHARMARANJAN LAWRENCE

Time can hide the Sadness,
Smiles can hide the Tears
But nothing can erase the Memory
Of the one We Loved so dear
Sadly missed along lifes way
And quietly remembered Everyday.

Ever Loving Wife: Wimala, Son: Dinesh,
Daughter: Roshi, Mummy,
Brother and Sisters.

106 2nd Cross Street,
Jaffna (14221)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அ. டொறிங்சன்

(மெல்சன்)

(பூநகரியில் ஹெலி சுட்டு அகால மரணமடைந்தார்)

பிறப்பு: 14 — 10 — 1968

இறப்பு: 22 — 08 — 1990

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 21-09-1990 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரிவால் துயருறும்:
மனைவி,
மகன்,
தாய்,
சகோதரங்கள்.

H-V, [illegible]
யாழ்ப்பாணம். [14211]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



மலர்வு: 15 – 08 – 1901

உதிர்வு: 21 – 08 – 1990

திருமதி

### பெரியதம்பி அன்னப்பிள்ளை

21 – 08 – 1990 இல் இறைவனடி சேர்ந்த திருமதி பெரியதம்பி அன்னப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 19 – 09 - 1990 புதன்கிழமை காலை 7மணியளவில் திருவடி நிலையத்திலும், வீட்டுக் கிருத்தியம் 20 – 09 – 1990 வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் இல்லத்திலும் நடைபெறும்.

இக்கிரியைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம், (14230)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திரு. சின்னையா சிவலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர் ''தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி'' யூனியன் கல்லூரி தெல்லிப்பழை)

அன்னைமடியில்: 01 – 08 – 1927

இறைவனடியில்: 05 – 09 – 1986

திதி:- 20 — 09 — 1990

ஆண்டுகள் பல கடந்தாலும் எமது உள்ளங்களில் உங்கள் நினைவுகள் உறைந்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

சைவமடம், கட்டுவன் சந்தி,
தெல்லிப்பழை. (14228)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முக்கொடுமை முறைப்பாடு

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒடுக்கும் பொருட்டு அரசாங்கப் படைகள் பயங்கரவாதம் புரிந்து வருகின்றன. அதனை அரசாங்கம் ஆதரித்து வருகிறது.

சர்வதேச மன்னிப்புச் சபை ஆகப் பிந்தி, கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட, அறிக்கையில் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சமாளிக்கும் பொருட்டு அரசுப் படைகள் வடக்கு - கிழக்கில் பொது மக்களைப் பயமுறுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதாக அந்த அறிக்கையில் மேலும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

படையினர், தாம் கொலை செய்பவர்களின் சடலங்களை விசாரணை எதுவும் இன்றி எர்த்துவிடுகிறார்கள்; பொதுமக்களின் சடலங்கள் கூட உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவதில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசாங்கப் படைகள் பயங்கர வாதத்தில் ஈடுபடுவது, மனித உரிமைகளை மீறுவது. சித்திரவதைகள்செய்வது போன்ற கொடுமைகளைச் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கைகளில் சுட்டிக் காட்டி வருவது தொடர் முறைப்பாடாகும்.

1983-87 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வடக்கு-கிழக்கிலும், 1988-89 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தெற்கிலும், அரசும் அதன் படைகளும் செய்த அட்டூழியங்களை மன்னிப்புச்சபை பல தடவைகள் அப்பட்டமாகப் புட்டுக் காட்டியிருந்தது.

அந்த வரிசையில் 1990 ஆம் ஆண்டின் நிகழ்காலப் பகுதியில் வடக்கு-கிழக்கில் நடக்கும் அரச பயங்கர வாதத்தினை அது அம்பலப் படுத்தி இருக்கிறது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைகளை பொருட்படுத்தித் தனது குறைகளை நிவிர்த்தி செய்ய வேண்டும் என்று அரசாங்கம் எப்போதும் நினைத்ததில்லை; நினைப்பதுமில்லை. அவ்வாறு நினைத்திருந்தால் அரச பயங்கரவாதம், மனித உரிமை மீறல், சித்திரவதை என்பன குறித்து மீண்டும் மீண்டும் முறைப்பாடுகள், குற்றச்சாட்டுகள், கண்டனங்கள் வந்திருக்கமாட்டா.

முன்சொன்ன மூன்று குற்றங்களையும் தான் செய்வதில்லை என்று எடுத்த எடுப்பிலேயே மறுத்துரைத்து, மழுப்புவதே ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பழக்கமாகிவிட்டது.

எனவே சர்வதேச மன்னிப்புச் சபையானாலும் சரி, சர்வதேச மனித உரிமைகள் அமைப்பானாலும் சரி தமிழ் மக்கள் மேற்சொன்ன முக்கொடுமைகளில் இருந்து விடுபட வேண்டும்; அதற்கு அவர்களுக்கு மனப்பூர்வமாக உதவ வேண்டும் என்று விரும்பினால்—

ஸ்ரீலங்கா அரசு மீது பொருளாதாரத் தடை, ராஜீக நிர்ப்பந்தம் என்பவற்றை சர்வதேச மட்டத்தில் அழுத்தக் கூடிய அளவுக்குத் தமது செயற்பாடுகளை வல்லமைப்படுத்த வேண்டும்; வலுப்படுத்த வேண்டும்.

ஏனெனில் -

கண்டன - குற்றச்சாட்டு அறிக்கைகள் ஸ்ரீலங்கா அரசுக்கு எருமை மாட்டின் மீது பெய்த மழை போல் ஆகிவிட்டன. அவ்வறிக்கைகள் அரசுக்குச் சூடு, சொரணை எதையும் எப்போதாவது ஏற்படுத்தும் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. ✱

# குடும்ப பங்கீட்டு அட்டை வழங்குவது உடனடியாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 20

குடும்ப பங்கீட்டு அட்டை வழங்குவது உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ் - மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதனும், செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். ஐ நித்திராஜாவும் நேற்று சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் இது சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

இலவச நிவாரணத்தை இடம் பெயர்ந்தோர் பங்கீட்டு அட்டை இன்றி நிவாரணப் பெர்மிட்டுக்களை மட்டும் கொடுத்துப் பெறுவதால் சிக்கல்கள் உருவாவதை அடுத்தே புதிய நடைமுறை குறித்து சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ குடும்பப் பங்கீட்டு அட்டைகளை இடம் பெயர்ந்துள்ள இடங்களில் பாவிக்க அந்தப்பகுதி கிராம சேவையாளர்களின் சிபார்சைப் பெறவேண்டும்.

★ பங்கீட்டு அட்டையில் ''இடம் பெயர்ந்தோர்'' என்று எழுதப்படவேண்டும்.

★ இடம் பெயர்ந்தோர் பெர்மிட்டுக்களைக் கொண்டு உணவுப் பொருள் கொள்வனவு செய்யும்போது பங்கீட்டு அட்டையையும் சமர்ப்பித்து பெற்ற பொருள்களின் விவரங்களைப் பதிய வேண்டும்.

★ பங்கீட்டு அட்டைகளில் உள்ள பெயர் விவரங்களை கிராம சேவையாளர்கள் தேர்தல் இடாப்புடன் சரிபார்த்து சிபார்சு செய்ய வேண்டும்.

★ பங்கீட்டு அட்டை இடம் பெயர்ந்த இடத்தில் செல்லுபடி ஆகும்.

★ புதிய அட்டை வழங்குதல் உடனடியாக நிறுத்தப்பட்ட போதும் வீடு எரிந்து அட்டைகளை இழந்தவர்கள் அல்லது அட்டைகளைத் தொலைத்தவர்கள் சரியான ஆவணங்களைஉதவி அரசாங்க அதிபர்களிடம் தெரிவித்து பெறலாம். [இ-3-6]

## ஒத்திவைப்பு

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமான் தேவஸ்தான மகோற்சவம் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப் பட்டுள்ளது. மகோற்சவம் நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாக இருந்தது. (இ)

## ஊர்காவலரிடம்

திருகோணமலை மாவட்டம் உப்பூறலில் கடந்த வாரம் காணாமற் போன பொதுமக்களைத் தேடிச் சென்ற அவர்களது உறவினர்கள் ஆறுபேரை முஸ்லிம் ஊர்காவலர் பிடித்து வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## முகாம் முற்று---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதல்களை நடத்த தமது முகாமை நோக்கி முன்னேறியதாகவும்-

அவர்களை விடுதலைப் புலிகள் போராளிகள் வழிமறித்துத் தாக்கியதாகவும்-

பல மணி நேரம் நீடித்த மோதல்களை அடுத்து அரச படையினர் பின்வாங்கி தமது முகாம்களுக்குத் திரும்பினர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தமோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் திலகண்ணாச்சி, தீபன் ஆகியோர் வீரமரணமடைந்தனர். (உ)

# தமிழர் மீதான விமானத் தாக்குதலை நிறுத்த ஐ.நா. முயற்சிக்க வேண்டும்

## லண்டன் அகதிகள் மாநாடு தீர்மானம்

லண்டன், செப். 20

ஸ்ரீலங்காப் படையினர் அந்நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் விமானத் தாக்குதல் நடத்துவதுநிறுத்த வேண்டும். இதனை உடனடியாக நிறுத்துவதற்கான முயற்சிகளை ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ள வேண்டும்.

லண்டனில் உள்ள செல்பி சென்ரறில் ஜூலை மாத இறுதியில் நடைபெற்ற அகதிகள் மாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

இந்த மாநாட்டில் அகதிகள் ஸ்தாபனங்கள், அகதிகள் ஏஜன்சிகள், மனித உரிமைகள் ஸ்தாபனம், தேவாலயங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்காவில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் இனப்படுகொலை யுத்தத்தையும் இந்த அகதிகள் மாநாடு கண்டித்துள்ளது.

ஆயிரக்கணக்கானோர் கொல்லப்படுவதற்கும் உருக்குலைந்து போவதற்கும் முழு மக்களும் இடம் பெயர்ந்து அகதிகள் பிரச்சினை உருவாவதற்கும் விமானத் தாக்குதல்கள் காரணமாக அமைகின்றன இந்த மனிதஉரிமை மீறல் நடவடிக்கைகளையும் தமிழ் மக்கள் அழிப்பையும் நாகரிக உலகம் அசட்டை செய்ய முடியாது என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. [இ]

## விமானத் தாக்குதலின் பின்னர்

# மாவை ஆலயத்தில் பூசைகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், செப். 20

பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் விமானத் தாக்குதல் இடம் பெற்றதையடுத்து உடனடியாகவே நேற்று பிராயச்சித்த பூசைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து வழமையான பூசைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக ஆலய ஆதீன கர்த்தா - பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாவிட்டபுரம் ஆலயப் பகுதியில் வீசப்பட்ட பீப்பாய்க் குண்டினால் ஆலயத்தின் வசந்த மண்டபம் மட்டுமே சேதமடைந்தது. மற்றும் பல இடங்களில் பரவலாக ஓடுகள் உடைந்திருந்தன.

நேற்று முன்தினம் நண்பகல் 1.30 மணியளவில் இத் தாக்குதல் இடம்பெற்றது. அவ்ரோவிலிருந்து நான்கு பீப்பாய்க் குண்டுகளும் பொம்மரிலிருந்து இரண்டு குண்டுகளும் வீசப்பட்டன.

இவற்றில் இரண்டு பீப்பாய்க் குண்டுகள் ஆலயச் சூழலிலும், ஏனையனவ அயற்புறங்களிலும், மாவிட்டபுரம் அலுமினியத் தொழிற்சாலையை அண்டிய பகுதிகளிலும் வீழ்ந்துள்ளன.

இந்த விமானத் தாக்குதல் நடந்தபோது ஆலய குருமார்கள் யாக மண்டபத்தினுள் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் விமானத் தாக்குதல் முடிந்த சில மணி நேரத்தின் பின் உடனடியாக பிராயச்சித்த பூசைகள் மேற்கொள்ளப்பட்டு ஆலயப்பூசைகள் ஆரம்பிக்கப்பட்டன, இன்று நவராத்திரி பூசையும் ஆரம்பிக்கும்.

மேற்படி விமானத்தாக்குதலால் ஆலயத்திற்கு சுமார் 20 லட்சம் ரூபாவரை சேதம் ஏற்பட்டிருப்பதாக ஆலய பிரதமகுரு தெரிவித்தார். (உ-3-6)

## அகதிகள் படகை கைப்பற்றினர்

தாளையடி, செப். 20

இந்தியா சென்ற மற்றும் ஒரு அகதிகள் படகு வடமராட்சிக் கடலில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது

இந்திய அகதிப்படகில் பிரயாணம் செய்த ஒருவர், கடற்படையினரைக் கண்டதும் கடலில் குதித்து நீந்திவந்து இத் தகவலைத் தெரிவித்தார் (இ-144)

# சீனாவில் ஒரே தினத்தில் 64பேருக்கு மரண தண்டனை

பீகிங், செப். 20

சீனாவின் தென் மாகாண நகரான கன்டோனில் பல்வேறு குற்றங்களுக்காக 64 பேர் ஒரேநாளில் சுட்டுக் கொல்லப் ட்டனர்.

நீதி ன்றங்களில் அவர்கள் மீதான விசாரணை முடிந்து மரணதண்டனை விதிக்கப் பட்ட மறுநாளே [செவ்வாய்க் கிழமை], தண்டனை நிறை வேற்றப்பட்டது.

கொள்ளை, களவு, கொலை, காடைத்தனம், சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்ததாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அவர்களில் ஒருவர் பெண் தனது முதல் கணவனின் இரண்டாவது மனைவிக்குப் பிறந்த பத்து வயதுச் சிறு [illegible] அப்பெண் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (இ-எ)

# போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், செப் 20

கடந்த ஞயிறு இரவு கோட்டை இராணுவத்துடனான மோதலில் 2 ஆவது லெப்டினன்ட் நிமலன் (பாலசிங்கம் ஜெயவதனன் தும்பளை பருத்தித்துறை) வீர மரணம் அடைந்தார்.

அதே சமயம் செவ்வாய்க் கிழமை இரவு 7.00 மணி அளவில் காங்கேசன் துறையில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் வீரவேங்கை சுலக்சன் (தி யோகராசா, தாளையடி) வீர மரணம் அடைந்தார்.

யாழ் கோட்டை முகாமிலிருந்து நடத்தப்பட்ட சினைப்பர் தாக்குதலில் காயம் அடைந்திருந்த லெப்டினன்ட் ரேகா (சுசிலா சங்கரப்பிள்ளை - மட்டுவில் கிழக்கு சாவகச்சேரி) 17 ஆம் திகதி வீரமரணமடைந்தார். (இ)

## காரைநகர்---

வேரடை அம்மன் கோவில் பகுதியில் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திலேயே ஒருவர் உயிரிழந்தார்.

உடனடியாக அப்பகுதியில் வந்த விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை அடுத்து படையினர் தாம் வந்த படகுகளிலேயே ஏறி முகாமுக்குத் திரும்பிச் சென்றனர். (உ)

# ஏழாலையில் "சகடை" போட்ட குண்டு வெடிக்கவில்லை

திருநெல்வேலி, செப். 20

சனிக்கிழமை மாலை 5 45 மணி அளவில் ''சகடை'' விமானம் ஏழாலைப் பகுதியில் குண்டு வீச்சு நடத்தியது.

அது அப்பகுதியில் ஒரே ஒரு குண்டையே போட்டது அது தோட்ட வெளியில் விழுந்தமையால் வெடிக்காது புதையுண்டது. (இ-143)

## புலிகளின் பங்கர்களை-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேயுள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளைக் கைப்பற்றுவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்றும் அந்த இராணுவ அதிகாரி மேலும் சொன்னார் என்று ''ராய்ட்டர்'' செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### இப்படியும் சொல்கிறார்கள்

இதேவேளை—

யாழ். கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து புலிகளை வெளியேற்றிய பின்னர் பாதுகாப்புப் படையினர் கச்சேரி, ஸ்ரான்லி வீதியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன என்ற ''நகைச் சுவை'' செய்தியும் அதே பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக வெளியாகி இருக்கிறது.

யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியிலிருந்து குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்குத் தமது ஆதிக்கத்தை விஸ்தரிக்கவே பந்தோபஸ்து படைகள் திட்டமிடுகின்றன.

ஸ்ரான்லி றோட் பகுதியை நோக்கிப் படைகள் செல்வதனால் எல். ரி. ரி. ஈ.யினர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்குள் புகுந்திருந்த படையினர் முன்னேற்றத்தைத் தடை செய்ய முயலுகின்றனர்- என்றும் அந்த நகைச்சுவைச் செய்தி மேலும் நீண்டு செல்கிறது. (ஒ-எ)

## யாழ். பல்கலை வெளி மாவட்ட மாணவருக்கு

யாழ். பல்கலைக்கழகத்தில் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் தமது பெயர்களைப் பதிவு செய்த அனைத்து பீடங்களைச் சேர்ந்த வெளி மாவட்ட மாணவர்கள் அனைவரையும் இன்று 20 ஆம் திகதி 9 00 மணி தொடக்கம் 1.00 மணி வரை ஆனந்த குமாரசாமி விடுதியில் தவறாது சமுகமளிக்கும்படி மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று 5 ஆவது தினமாக திலீபனுக்கு நினைவஞ்சலி

யாழ்ப்பாணம், செப் 20

தியாகி திலீடனின் நினைவஞ்சலி ஐந்தாவது நாளாக நேற்றுக் குடாநாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது.

சந்திகள் தோறும் தியாகி திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மலர் மாலைகள் சாத்தப்பட்டு நினைவஞ்சலி செய்யப்பட்டு வருகிறது.

காங்கேசன் துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி போன்ற பிரதான வீதிகளின் முக்கியசந்திகளில்கொட்டகைகள்போடப்பட்டுள்ளன.

விமானத் தாக்குதலால் முற்றாகப் பாதிப்படைந்த அரசடி - பிறவுண் வீதிச் சந்தியில் தியாகி திலீபனுக்கு அலங்கரிக்கப்பட்ட பந்தல்கள் அமைக்கப்பட்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

நல்லூரிலுள்ள திலீபன் தூபியிலும் மலர்கள் தூவப்பட்டு பொதுமக்களால் நினைவஞ்சலி செய்யப்பட்டு வருகின்றது.

வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வலிகாமம் பகுதிகளிலும் தியாகி திலீபனுக்கு பரவலாக நினைவஞ்சலி செலுத்தப்படுகிறது. (இ-7)

## பெருமாள் கோவிலடிச் சம்பவம்:

# கணவனும் நேற்று மரணம்

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியில் நேற்று முன்தினம் விழுந்து வெடித்த பீரங்கிக் குண்டினால் படுகாயமடைந்த மற்றொருவர் நேற்று மானிப்பாய் யாழ் போதனா ஆஸ்பத்திரியில் மரணமானார்.

அதனால் குறிப்பிட்ட சம்பவத்தில் பலியானோர் எண்ணிக்கை இரண்டாக உயர்ந்துள்ளது. வேலன் தியாகராசா (வயது 4?) என்பவரே நேற்று மரணமானவராவார். இந்தச் சம்பவத்தில் இவரது மனைவி தியாகராசா கமலாதேவி சம்பவம் நடந்த இடத்திலேயே மரணமானார் என்பது வாசகர்கள் அறிந்ததே [உ-15]

# காசோலை மாற்ற முடியாது அரச ஊழியர்கள் அவதி

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களினால் கடந்த மாதங்களில் சம்பளமாகவழங்கப்பட்ட காசோலைகள் இன்னும் மாற்றப்படாமல் ஊழியர்களிடமே இருக்கின்றன. இவற்றை மாற்ற முடியாது பலரும் திண்டாடுகிறார்கள்.

பருத்தித்துறைக்கு வரும் கப்பலில் இயங்கவுள்ள நடமாடும் வங்கியில் இத்தகைய மாற்றப்படாத காசோலைகளை உரிய திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் பெற்றுச்சென்று மாற்றிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா? என்று ஊழியர்கள் பலரும் கேட்கின்றனர். (இ-143)

# குஜ்ரால் விஜயத்துக்கான திகதி குறித்து தீர்மானம் இல்லை

கொழும்பு, செப். 20

இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ராலின் இலங்கை விஜயத்துக்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் முன்கண்டவாறு கூறினார் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ஆனால் திரு. குஜ்ரால் கொழும்பு விஜயம் செய்வதற்கான ராஜரீக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அப்பேச்சாளர் சொன்னார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி பேச்சுக்களை நடத்துவதற்காக திரு. குஜ்ரால் விரைவில் கொழும்பு செல்வார் என்று பிரதமர் வி. பீ. சிங் சென்னையில் வைத்து அறிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. (இ - எ)

# கட்டவிழ்த்து வந்த குரங்கு சிறுவனை கடித்து குதறியது

யாழ்ப்பாணம். செப் 20

விளையாடிக்கொண்டிருந்த 3 வயதுச் சிறுவனை கட்டறுத்த குரங்கு ஒன்று கடித்துக் குதறியது தலை, கை, கால் உடம்பு பூராவும் கடிகாயங்களுடன் சிறுவன் மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

பிரான்பற்று என்ற இடத்தில் நேற்று செவ்வாய் காலை இச்சம்பவம் இடம்பற்றது.

தெய்வேந்திரம் சத்தியதாஸ் என்ற சிறுவனே சம்பவத்தில் காயம் அடைந்தவர் ஆவார்.

காலை நேரம், மற்றும் இருவருடன் வீட்டுமுற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை எங்கிருந்தோ திடீரென பாய்ந்து வந்த குரங்கு கீழே விழுத்தி உருட்டிஉருட்டி கடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

# முத்திரைக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செப். 20

குடாநாட்டில் முத்திரைக்கும் வெளிநாட்டுத் தபால் உறைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

வெளியிடங்களிலும், தனியார் கடைகளிலும் முத்திரைகள் ஒன்றரை மடங்கு அதிக விலையில் விற்கப்படுகின்றன.

தபால் நிலையங்களில் பதிவுத் தபால்கள் ஏற்கப்படுகின்றபோதிலும்முத்திரையை வெளியிடங்களில் வாங்கி ஒட்டிவருமாறு பொதுமக்கள் வேண்டப்படுகிறார்கள். (இ-7)

## மூவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 20

கடற்படையின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி தொண்டமானாறில் நேற்று மூன்று பொதுமக்கள் காயமுற்றனர். [உ]

# வி. பி. சிங் மீண்டும் கவலை

புதுடில்லி, செப். 20

இலங்கையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் சண்டை குறித்து இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் மீண்டும் கவலை தெரிவித்துள்ளார்.

இந்திய முப்படைகளின் தளபதிகள் மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொண்ட மாநாட்டில் பேசுகையில் அவர் இம்முறை கவலை தெரிவித்தார்.

இலங்கை நெருக்கடி மோசமடைவதன் காரணமாக இலங்கைத் தமிழ் அகதிகள் கூட்டம்,கூட்டமாக தமிழகத்திற்கு வந்து சேருவதாகவும் பிரதமர் சிங் தெரிவித்தார். (அ-எ)

# வவுனியா அரச அதிபர் பதவி ஏற்பு

கொழும்பு, செப். 20

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக திரு கே. தர்மலிங்கம் பதவியேற்றார்.

இவர் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நிதி அமைச்சின் செயலாளராகவும் மட்டுநகர் உதவி திட்டமிடல் பணிப்பாளராகவும் பணியாற்றியிருந்தார். (ஒ-எ)

# பதிவுத் தபால் இன்று முதல் ஏற்கப்படும்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் இயங்கும் பிரதம தபால் நிலையத்தில் இன்று 20ஆம் திகதிமுதல் பதிவுத் தபால்கள் ஏற்கப்படும்.

அதேசமயம் வெளிநாடுகளிலிருந்தும், உள்ளூர்களிலிருந்தும் வந்த பதிவுத் தபால்கள் நேற்றுமுதல் விநியோகிக்கப்பட்டன. (இ-7)

# மண் எண்ணெய் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 20

யாழ் குடாநாட்டில் மண் எண்ணெய்யின் விலை நேற்று மேலும் வீழ்ச்சியடைந்தது.

நேற்று மண்ணெண்ணெய் போத்தல் ரூபா 35 ஆக விற்பனை ஆகியது. (உ-6)

# வங்கி ஊழியர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 20

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை யாழ் பல்கலைக்கழக ஆனந்தக்குமாரசாமி விடுதியில் காலை 9 00 மணிக்கு சமுகமளிக்குமாறு பிரதான முகாமையாளர் அறிவித்துள்ளார். (அ.7)

# இறக்கும் வேலை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 02

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த 'லங்கா சிறி' கப்பலில் இருந்து 2 ஆயிரத்து 600 தொன் உணவுப்பொருள்களையும் இறக்கும் வேலைகள் இன்று காலை ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-3-6]

# உண்ணாவிரதம்

அச்சுவேலி, செப் 20

தியாகி திலீபனின் நினைவாக புத்தூர் வடக்குவெளி சரஸ்வதி சனசமூக நிலையத்தில் மயில்வாகனம் சந்திரசேகரம் என்பவர் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கிறார். (இ-1)

## இரு புதிய இராணுவ முகாம்கள்:

# மட்டக்களப்பு கிராம மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர்

கொழும்பு, செப். 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களைச்சேர்ந்த மக்கள் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து மட்டக்களப்பு நகரில் உள்ள அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

பன்குடாவெளி, கரடியனாறு, நரிப்புல்தோட்டம், மகிழவெட்டுவான், ஆயித்தியமலை, நெல்லிக்காடு, கெழுக்குமதி உட்பட பத்துக் கிராமங்களைச் சேர்ந்தவர்களே இப்படி இடம்பெயர்ந்தனர்.

இக்கிராமங்களுக்கு அருகில் இரண்டு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டதே இவர்கள் இடம்பெயரக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே செங்கலடி, ஏறாவூர் பகுதிகளில் உள்ள மக்களும் இடம்பெயர்ந்து மட்டக்களப்பில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். (ஒ-எ)

# அக்கரைப்பற்றில் கைதான 37 பேருக்கு என்ன நடந்தது?

கொழும்பு, செப். 20

அக்கரைப்பற்றுப் பகுதியில் ஆயுதப்படையினர் பிரவேசித்த அன்று கைதுசெய்யப்பட்ட 37 பேர் பற்றிய விவரங்களை பெற்றுத்தருமாறு அவர்களின் உறவினர்கள் செஞ்சிலுவைச்சங்க சர்வதேச குழுவினரைக் கேட்டிருக்கின்றனர்.

கைதான 37 பேரில் பலர் அரச ஊழியர்கள். அவர்கள் எங்கிருக்கிறார்கள், என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

# கடமைக்குச் சமுகமளிக்க துணை வேந்தர் கோரிக்கை

யாழ். பல்கலைக்கழக கல்விசார் பணியாளர்களையும், பிற உத்தியோகத்தர்களையும் உடனடியாக வேலைக்கு சமுகமளிக்குமாறு துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைக் காலத்தில் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டமும் பிற இடையூறுகளும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பணியாளர்களின் வரவுக்குத் தடையாக இருந்தன. இதனால் பல்கலைக்கழகத்தில் பல முக்கிய அலுவல்கள் தடங்கல் பட்டுள்ளன.

இப்பொழுது ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளபடியால், இந்தப் பணிகளைத் தொடங்கித் தொடர வேண்டியது அவசியமாகிறது. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-6)

# முஸ்லிம் ஊர்காவலரினால் வயோதிபர்கள் கொலை!

யாழ்ப்பாணம், செப். 20

திருகோணமலை மாவட்டம் உப்பூறல் என்ற இடத்திலிருந்து தோப்பூருக்கு உணவு வாங்கச் சென்ற தமிழ் வயோதிபர்கள் முஸ்லிம் ஊர்காவலரினால் அடித்துப் படுகொலை செய்யப்பட்டனர்.

கதிர்காமர் மரியான் [வயது 75], குமரியான் வைரவன் [வயது 75] ஆகிய இருவரும் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் கந்தன் வைரவன் [வயது 70], சீனித்தம்பி கந்தையா (வயது 75), வைரவன் சித்திரவேல் [வயது 60] ஆகியோர் படுகாயமுற்றனர்.

---

## மின்சாரம்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கம் மின்நிலையம் தாக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து தாம் அவரிடம் விளக்கிக் கூறியதாகவும்—

மின்சார விநியோகத்தைச் சீராக்க— சேதமடைந்த உபகரணங்களை உடனடியாக வழங்க— நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தமக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் யாழ். அரச அதிபர் கூறினார்.

இதனிடையில்—

சுன்னாகம் மின்நிலையம், மின் விநியோக கேபிள்கள், மின் கோபுரங்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் குறித்து உடனடியாக விளக்கமாக தகவல் தரும்படி இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் திரு. வி. கந்தசாமி, சுன்னாகம் மின்நிலையத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர் திரு. எஸ் சிவநேசன் ஆகியோரை இலங்கை மின்சார சபைத் தலைமைப் பீடம் கேட்டிருப்பதாக அறியவந்தது. (உ-3 6)

---

## எல்லைப்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம்—

இராணுவப் படைக்கு ஆள் திரட்டும் முயற்சியும் தென் பகுதியில் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றது.

நேற்று நாட்டின் பல பகுதிகளிலும்— மொத்தம் பத்து நிலையங்களில்— இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக சிங்கள இளைஞர்கள் ஆயிரக் கணக்கில் இந்த நிலையங்களில் கூடியிருந்தனர். (இ-உ-எ)

---

## 12 ஆயிரம்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாதம் ஒன்றுக்கு 12 ஆயிரம் தொன் உணவுப் பொருள்கள் தேவை என்பதை அரச அதிகாரிகளிடம் விளக்கிக் கூறினேன்.

ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன், புனர்வாழ்வு அமைச்சர் திரு. ஏ எம். எஸ். அதிகாரி, அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. சரித்த ரத்வத்தை ஆகியோரைச் சந்தித்தேன்.

உணவு நிலைமை, பணப் புழக்கம், நிவாரண வேலைகள் உட்பட முக்கிய விடயங்கள் குறித்து பேச்சுக்கள் நடத்தினேன்— என்றார். [அ-3-6]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org